**செய்தி வெளியீடு எண்: 547** **நாள் : 09.10.2013**

**<u>பத்திரிகைச் செய்தி</u>**

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 75வது கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மற்றும் வாரியத் தலைவர் திரு. கே. டி. பச்சைமால் அவர்கள் தலைமையில் சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு மோகன் பியாரே இ.ஆ.ப. அவர்கள், தொழிலாளர் ஆணையர் டாக்டர் பி.சந்திரமோகன், இ.ஆ.ப. அவர்கள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் திரு கே.அய்யனு, நிதித்துறை சார்புச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.காமராஜ், நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் திரு.டி.எம்.ஜவஹர்லால், திரு வி.ரெகுராஜன், திரு ஸ்ரீநாகேஸ்வர், திரு வி.ராஜப்பன், திரு பா.ராம்குமார், தொழிலாளர்கள் தரப்பு பிரதிநிதிகள் திரு ரா.சின்னசாமி, எம்.எல்.ஏ, திரு டி.எம்.மூர்த்தி, திரு கே.ஏ.மனோகரன், திரு வி.குமார், திரு எம்.சௌந்திரபாண்டியன் மற்றும் நியமன உறுப்பினர்கள் திருமதி பாத்திமா வசந்த் மற்றும் திருமதி சுசீலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் விவாதப் பொருட்களை வாரியச் செயலாளர் திருமதி உ.உமாதேவி அவர்கள் முன்மொழிந்தார். இக்கூட்டத்தில் பெண் தொழிலாளிக்கு ரூ.6,000/– மகப்பேறு உதவித்தொகை வழங்கும் திட்டம், தொழிலாளி விபத்தில் மரணமடைந்தால் விபத்து மரண உதவித் தொகை ரூ. 1 லட்சம் வழங்கும் திட்டம், தேசிய/மாநில/மாவட்ட அளவில் தடகளப் போட்டிகளில் வெற்றிபெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம், கணினி பயிற்சி மற்றும் ஓட்டுநர் பயிற்சி முடிப்பவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஆகியவை அறிமுகப்படுத்தியும், கல்வி ஊக்கத் தொகை திட்டத்தினை முதல் பத்து இடங்களுக்கு விரிவுபடுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதனால் தொழிலாளர் நல நிதி செலுத்தும் ஏராளமான தொழிலாளர்கள் பயனடைவர். மேலும் தொழிலாளர் நல நிதி ஆண்டு சந்தாத் தொகையினை ரூ.7/–லிருந்து ரூ.10/– ஆக உயர்த்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. வாரியத்தின் 2012–13ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை ஏற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வாரியச் செயலாளர் திருமதி உ.உமாதேவி அவர்கள் நன்றி கூற, இக்கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**